# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,310 — 1937 ம் ஸு ஆவணிமீ 20 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1901 ம் ஆண்டின் நாய்ப் பதிவுச் சட்டம்.

**1901** ம் ஆண்டின் நாய்ப் பதிவுச் சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய வெலிகம நகர சங்கத்தின் பரிபால எல்லைக்குள் வழங்குவதற்காக முறைமையான அதிகாரியால், அதாவது வெலிகம நகரசங்கத் தலைவரினால் ஆக்கப்பெற்ற உபவிதிகள்.

மென்றேக் ஜயவிக்கிறம,
வெலிகம நகரசங்கத்தலைவர்.

வெலிகம, 1937 ம் ஸு ஆவணிமீ 2 ந் உ.

உபவிதிகள்.

1. இந்த உபவிதிகளில் :—"தலைவர்" என்பது வெலிகம நகர சங்கத் தலைவரையும், மிருகப் பதிவுக் கட்டணம் என்பது குறித்த சட்டத்தின் 5 ம் பிரிவுக்கமைய வருடாவருடம் பதிவுக்காக கட்டவேண்டிய கட்டணத்தின் தொகையையும், "சொந்தக்காரன்" என்பது நாயையுடையவனாக அல்லது அதன் இருப்பவரையும் கருதும்.

2. வெலிகம நகரசங்க எல்லைக்குள் வளர்க்கப்படும் ஒவ்வொரு நாய்க்கும் வருடாந்தக் கட்டணம் :—
ஆண் நாய் ஒன்றுக்கு ரூபாய் 1. பெண் நாய் ஒன்றுக்கு ரூபாய் 1·50.

3. இந்த வருடாந்தக் கட்டணம் எந்த வருடத்திற்குக் கொடுபட வேண்டுமோ அந்த வருடத்திலே (மேமீ 1 ந் திகதிக்குள் சொந்தக்காரனாற் கொடுபடவேண்டும்.

4. இந்த வருடாந்தப் பதிவு கட்டணம் கொடுபட்டவுடன் தலைவர், அந்த நாயின் சொந்தக்காரனுக்குப் பின்னர் கூறப்படுபவைகளைக் கொடுப்பார் :—

(i.) பதிவுசெய்யப்பட்டதைப்பற்றிய ஒரு அறிக்கைப்பத்திரம்.

(ii.) பதிவு இலக்கம் குத்தப்பெற்றதும் உலோகத்தாலாயதுமான ஒரு சீட்டு, அல்லது கழுத்துப்பட்டி.

என்றாலும் பதிவுசெய்வதற்கு விண்ணப்பம்பண்ணிக்கொள்ள வேண்டிதான நாயை தனது பார்வைக்குக் கொண்டுவரும்படி தலைவர் கேட்கலாம். பின் கூறப்படும் காரணங்களை முன்னிட்டு, அந்த நாய்க்குப் பதிவு அறிக்கைப் பத்திரமும் உலோகத்தாலாகிய சீட்டு அல்லது கழுத்துப் பட்டியும் கொடுக்க மறுக்கலாம் :—

(*a*) அந்த நாய் பார்வைக்குக் கொண்டுவரப்படாதிருப்பின், அல்லது

(*b*) அந்த நாய் தலைவருடைய அபிப்பிராயத்தில் சீவிப்பதற்கு யோக்கியதையற்றவிதமாக அங்கவீனப்பட்டு அல்லது நோய் கொண்டு இருப்பின், அல்லது

(*c*) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக உபத்திரவம் செய்யப்பட்டு, அல்லது அலட்சியம் பண்ணப்பட்டு இருப்பின் என்பதாம்.

5. ஒரு நாய்க்கு பதிவு அறிக்கைப்பத்திரம் கொடுத்தானதின்பின் அந்த நாயினுடைய சொந்தக்காரனின் விலாசத்திற்கு அறிவித்தல் அனுப்பியபின், தலைவர் அந்த அறிக்கைப் பத்திரத்தை அழித்து விடலாம்.

இப்படிச் செய்வது பின்னாற் காணப்படும் காரணங்களைக்கொண்டேயாம் :—

(*a*) அந்த நாய் தலைவருடைய எண்ணத்தில், சீவிப்பதற்கு யோக்கியதையற்றதாக அங்கவீனப்பட்டு அல்லது நோய்கொண்டதாகி விடுதல், அல்லது

(*b*) அந்த நாய் சொந்தக்காரனால் வழக்கமாக உபத்திரவப்படுத்தப் பட்டு, அல்லது அலட்சியம்பண்ணப்பட்டு இருத்தல், அல்லது

(*c*) அந்த நாய் தொற்றக்கூடிய அல்லது பரவக்கூடிய நோயினாற் பீடிக்கப்பட்டிருக்கும் காலத்தில் வேறு நாய்களுடன் ஊடாடுவதற்கு அதை அதன் சொந்தக்காரன் விடுதல் ஆகியனவாம்.

6. (1) மேலே கூறப்பட்ட 4 ம் இலக்க உபவிதியின்படி பதிவு அறிக்கை பத்திரம் பெறாது இருப்பதும் அல்லது 5 ம் இலக்க உபவிதியின்படி அப்பதிவுப்பத்திரம் அழிக்கப்பெற்றதுமான நாயின் சொந்தக்காரன் தலைவர் அறிவித்தற்பத்திரம் அனுப்பியவுடன் அவ்வறிவித்தலிற் குறிப்பிட்டிருக்கும் நேரத்திலும் இடத்திலும் அந்த நாயைக் கொண்டுசென்று காட்டவேண்டும்.

(2) இப்படியான ஒவ்வொரு நாயும், தலைவர் தகுதியென்று எண்ணும் வகையில் அழிக்கப்பெற்று அல்லது வேறுவகையாக நீக்கப் பெறலாம்.

7. பதிவு அறிக்கைப்பத்திரம் பெற்று ஒரு உலோகச் சீட்டு அல்லது கழுத்துப்பட்டி கிடைக்கப்பெற்ற ஒவ்வொரு நாயும் அந்தச் சீட்டுப் பெலமுள்ளதாக விருக்கும் காலம் முழுவதும் அந்தச் சீட்டை அல்லது கழுத்துப்பட்டியை அந்த நாய் அணிந்து இருக்கும்படியான எச்சரிக்கை கொள்ளவேண்டும்.

8. இந்த உபவிதிகளினுள் தனக்கு உரிய தத்துவங்கள் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதையாவது எவருக்காவது எழுத்து மூலமாகத் தலைவர் கொடுக்கலாம்.

9. 1933 ம் ஆண்டு சித்திரைமீ 12 ந் திகதியின் *நி. 7,976 பக்கம் உள்ள வெலிகம நகரசபையில் பிரசுரம்பண்ணப்பெற்ற பிரமாணங்கள் இத்தால் அழிக்கப்படுகின்றன.

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
இலக்கம் 1,585 (கண்டி).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி௴ 20 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குமுன் இதனடியிற் கையொப்ப மிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 மு ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937 ம் ஆண்டு (ஜுலை) ஆடி௴ 30 ந் தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொர்டுக்கப்பட்டது.

எச். எஸ். எம். ஹோர்,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏஜன்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிட மும்பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், உடம்பாறப் பிரிவில் தெற்கு உடசியபாற்றில் டோறலியட்ட என்னும் கிராமத்தில் உள்ள கீழே சொல்லப் படும் காணித்துண்டுகள் :—

பிரதமபடம் நம். A 436.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | கொஸ்கஹாயற்றதென்ன | .. .. | 2 | 0 | 2 |
| 2 | றுாப்பெலன்கஹஹேன (வழிக்காக விடப்பட்டது) | .. | 0 | 0 | 7 |
| | | | 2 | 0 | 9 |

எல்லைகளாவன : வடக்கு-முடியும் பீ. அப்புஹாமியும் மறுபேரும் உரித்தாடும் பற்றின்கெற்றியகேன, கொஸ்கஹாபிற்றியஹேன ; கிழக்கு-முடியும் டி. எஸ். கருணரத்தினவும் உரித்தாடும் முடுனெஹேனயும், முடியும் டபிள்யு. பீ. விக்கிரமரத்தினஅப்புஹாமியும் உரித்தாடும் எகலகஸ்ஹீனஹேனயும் ; தெற்கு-வேகலையிலிருந்து பெரிய தெருவுக்குப் போகும் கன்சபாவப் பாதை ; மேற்கு-முடியும் ஈ. புஞ்சிவண்டாவும் உரித்தாடும் றுாப்பெலன்கஹேன.

1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நொம்பர் 1,586 (கேகாலை).

இதனேடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோந்தைக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1937 ம் ௵ (ஆகஸ்ட்) ஆவணி௴ 20 ந் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனுல் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1937 ம் ௵ (ஜுலை) ஆடி௴ 2 ந் தேதியிலன்று கேகாலைக் கச்சேரியில் கொடுக்கப்பட்டது.

கார்ள். ஈ. ஆண்ற்,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரத்தைக் கேகாலை உதவி அரசாட்சி ஏஜன்று அவர்களிடமும் அவைகளின் அளவைப்படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நிலஅளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(b) இக்காணிக ளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

சப்பிரகாம மாகாணம், கேகாலை டிஸ்திறிக், பெலிகல் கோறளை, கண்டுபிற்றபற்று தெற்கு, அறுக்முல்ல கிராமத்திலிருக்கும் துண்டுக் காணிகளாவன :—

பிரதமபடம் நம்பர் 4,059.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | தலுக்கல்ல முக்கலான | .. .. | 0 | 1 | 4 |
| 2 | கொகுஅம்பஹேன அல்லது தலுக்கல்ல மூக்கலான் | .. | 3 | 0 | 5 |
| 3 | — (பாதையும் சேமித்த நிலமும்) | .. | 0 | 0 | 10 |
| | | | 3 | 1 | 19 |

எல்லைகளாவன :—வடக்கு-முடிக்குரிய தலுக்கல, கல்லு, கிக்கொட எஸ்ரேற், எச்சன்ஸ் ; மெசஸ் கம்பர்பாச் அண்ட் கொ. முடிக்குரிய கொகு அம்பகேன கல்பொத்த அல்லது தலுக்கல (கல்லு), கிக்கொட எஸ்ரேற் : எசசன்ஸ் மெசஸ் கம்பர்பாச் அன்ட் கொம்பணி ; கிழக்கு-பி. ப. 2,007 ல் 45 ம் துண்டுக் காணி கிக்கொட எஸ்ரேற், எச்சன்ஸ் மெசஸ் கம்பர்பாச் அண்ட் கொ.; தெற்கு-கிக்கொட எஸ்ரேற், எசச்ன்ஸ், மெசஸ் கம்பர்பாச் அண்ட் கொ ; மேற்கு-கிக்கொட எஸரேற், எச்சன்ஸ், மெசஸ் கம்பர் பாச் அண்ட் கொ., முடிக்குரிய தலுக்கல (கல்லு).

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பில் வேலையாட்களுக்கும் லயின்மென்சுக்கும் குடியிருக்கும் கட்டடத்திற்கு என்னும் பகிரங்க தேவைகது வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 744. குறிச்சி—தம்மிற்ற 4 ம் பகுதி.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | சியம்பலகஹவத்த தம்மிற்ற, 4 ம் பகுதியில் இறைவரி இல. 69 ன் பகுதி | தென்னங்காணி, 15 வருஷஞ்சென்ற 37 தென்னையும், ஒரு கட்டடத்தொட்டியுமுள்ளது | எம். அக்கவன்சதேரோ, அபய சேகரா ருமய புத்த கோவில், தம்மிற்ற, 4 ம் பகுதி | 0 | 1 | 21·2 |
| 2 | சியம்பலகஹவத்த, தம்மிற்ற 4 ம் பகுதியில் இறைவரி இல. 67 ன் பகுதி | தென்னங்காணி, 30 வருஷஞ்சென்ற 6 தென்னையும், 15 வருஷஞ்சென்ற 7 தென்னையும், 10 வருஷஞ்சென்ற 2 பலாவும், 4 வருஷஞ்சென்ற 3 பலாவும், 10 வருஷஞ் சென்ற 1 ஈரப்பலாவும், வண்டிற்பாதையின் பகுதியுமுள்ளது | விஜயதாச குணசிங்க, தம்மிற்ற 4 ம் பகுதி | 0 | 0 | 19·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்களின் எண்ணப்படி சனுதிகார ஆட்சிமந்திராலோசனைச்சபை எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ௵ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 13 ந் தேதியிலன்று 10 மணிக்கு நீர்கொழும்பு திறசேரிக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1937 ம் ௵ (ஒகஸ்ற்) ஆவணி௴ 13 ந் ௳.

டபிள்யு. டீ. குணறற்ன,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு.

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் மிடிகம மேற்கில் ஓர் பகிரங்க கிணற்றிற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது :—

பிரதமபடத்து இல : A. 538. குறிச்சி—மிடிகம மேற்கு.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர் | விசாலம். ஏ. | று. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | தெம்பிலிகஸ்றுாப்ப .. | தோட்டத்தில் பயிர் இல்லை .. | ஜே. சீ. ஜயவர்தன, சீ. ரீ. டொன் சைமன், இருவரும் மிடிகம வாசிகள் | 0 | 0 | 0·9 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணியை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1937 ம் ஹூ (செப்டம்பர்) புரட்டாதிமீ 18 ந் தேதியிலன்று காலை 9 மணிக்கு மிடிகம ஆண் பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி.
1937 ம் ஹூ ஆவணியீ 16 ந் உ.

எஸ். குமாரசாமி,
மேலதிக உதவி அரசாட்சி ஏசண்டு, மாத்தறை.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் வாய்க்காலுக்கு (ஓடைக்கு) வேண்டிய சேமிப்பு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. A 512. குறிச்சி—சித்தாமடம்.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 1 | வெஸ்றலின் தோட்டம் .. | தென்னந்தோட்டம் .. | என். ஜே. மாட்டின் தென்னந்தோட்டம் லிமிற்றட் (மனேஜர், சிற்றுமடம் லூயிஸ் பிறவுன்) | 0 0 28·2 |
| 2 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 0 17·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய கதரியகாரர்மூலமாய் 1937 ம் ஹூ (செப்ரம்பர்) புரட்டாதி மாசம் 17 ந் தேதியிலன்று காலை 11 மணிக்கு சிலாபக் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

புத்தளம் கச்சேரி,
1937 ம் ஹூ (ஓகஸ்ற்) ஆவணிமீ 14 ந் உ.

ஜே. லேற,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

## சுப்பிறீங்கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : காலி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் தென்மாகாண டிஸ்திறிக்கைச்சேர்ந்த கிறிமினெல் வழக்கு விசாரணை, 1937ம் ஆண்டு (செப்ரெம்பர்) புரட்டாதி மாதம் 15 ந் திகதியாகிய புதன்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
சீ. ஹரிசன் ஜோன்ஸ்,
தென் மாகாணப் பிஸ்கால்.

காலிப் பிஸ்கால் கந்தோர்,
1937 ம் ஹூ ஓகஸ்ற்மீ 16 ந் உ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.